விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆவணி 18 ஜுலைகல் 27 இதழ் 205

யாழ்ப்பாணம் புதன்கிழமை 3-9-1986

## ஆகஸ்ட் மாதத்தில் படையினர் தாக்குதலுக்கு 137 பொதுமக்கள் பலி

### பிரஜைகள் இணைப்புக்குழு அறிக்கை

யாழ்ப்பாணம், புதன் அரசபடையினரின் தாக்குதலுக்கு கடந்த ஆகஸ்ட்மாதம் 137 பேர் பலியாகியுள்ளதாக பிரஜைகள்குழு இணைப்புக் குழு அமைப்பாளர் திரு எஸ் சிவானந்தராஜா நேற்றுவெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கடந்தமாதம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 43பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 31 பேரும், யாழ்ப்பாணத்தல் 27 பேரும் பலியாகியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும்மாவட்டங்களில் பலியானவர் விபரம்: அம்பாறை 03, முல்லைத்தீவு. 01, மன்னார் 08, வவுனியா 09, கிளிநொச்சி 12 வேறுமாவட்டங்கள் 03. [இ-ஓ]

## வசாவிளான் வித்தியாலயத்தில் மீண்டும் இராணுவமுகாம்

# சுமார் 50 பொதுமக்கள் பணயம் வைக்கப்பட்டனர்

### 'ஷெல்'தாக்குதலால் பலர் காயம்

(வசாவிளான் நிருபர்)

**பலாலி இராணுவ முகாமிலிருந்து இரு முனைகளில் நேற்று முற்பகல் 11 மணியளவில் வெளியேறிய இராணுவத்தினர் மீண்டும் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் முகாமமைத்துள்ளனர்- பாடசாலைக்குள் சேதமடைந்த கட்டடங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த சுமார் 50 பொதுமக்கள் படையினரால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.**

பொதுமக்கள் பணயம் வைக்கப்பட்டதையடுத்துப் போராளிகள் தமது எதிர்த் தாக்குதலை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தது எனினும் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து போராளிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து சுற்றிவளைத்துள்ளனர்.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது:-

பலாலி முகாமிலிருந்து இரு முனைகளில் வெளியேறிய படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் இரு மணிநேர நேரடி மோதல் ஏற்பட்டது. பாடசாலை வளவினுள் பொதுமக்கள் இருந்தமையால் போராளிகளுக்குத் தமது எதிர்த் தாக்குதலைத் தொடர்ந்து நடத்த முடியாமற்போய் விட்டது.

இதையடுத்து பிற்பகல் ஒரு மணியளவில் இராணுவத்தி (4-ம் பக்கம் பார்க்க)

### இராணுவத்தினரின் இரு 'துருப்புகாவும்வண்டி' சேதம்

#### புலிகள் தாக்குதல்

(நமது நிருபர்)

மன்னார்கோட்டை இராணுவ முகாமிலிருந்து நடைபவனியாகவும், மூன்று 'துருப்புக்காவும் கவச வண்டிகளிலும் 4 ட்ரக்குகளிலும் ரோந்து சென்ற இராணுவத்தினரை தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்கொண்டு தாக்குதல் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலின் போது ஒரு பவ்வலோ துருப்புக்காவும்கவச வண்டி சின்னாபின்னமாக்கப்பட்டு சிதறியதாகவும் மேலும் ஒரு பவ்வலோ பலத்த சேதத்துக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை 9 மணியளவில் தாழ்வுபாடுக்கும் இடையில் நடைபெற்றது.

ரோந்து சென்ற இராணுவத்தினரை நோக்கி விடுதலைப்புலிகள் ஆர். பி. ஜி. கொண்டு தாக்கியதாலேயே பவ்வலோ துருப்புக்காகவும் கவசவாகனங்கள் சேதமடைந்ததாகவும் இராணுவ தரப்பில் இழப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலைத்தொடர்ந்து இராணுவத்தினர் மீண்டும் தமது முகாமுக்குத் திரும்பிச் சென்றனர். முகாமிலிருந்து 15 க்கு மேற்பட்ட 'ஷெல்'களை ஏவியவண்ணமிருந்தனர்.

நேற்றுக்காலை 9-30 மணி தொடககம் போக்குவரத்துச் சேவை மன்னார்ப்பகுதியில் நடைபெறவில்லை. (மா)

## கனகபுரத்தில் போராளிகள் இராணுவம் கடும் சமர்

### படையினரின் துப்பாக்கி போராளிகள் வசம்

கிளிநொச்சி, செவ் தமிழ் ஈழவிடுதலை இயக்க போராளிகளும், இராணுவத்தினருக்குமிடையில் கனகபுரத்தில் நேரடிமோதலின் போது இராணுவத்தினரால் விட்டுச் செல்லப்பட்ட நவீனரக துப்பாக்கியொன்றைப் போராளிகள் கண்டெடுத்தனர்.

இச்சம்பவம் கனகபுரம் ஐந்தாம் பண்ணையில் இடம்பெற்றது

இம் மோதலின்போது கவசவாகனத்தில் பூட்டப்பட்ட பீரங்கியினுல் இராணுவத்தினர் தாக்கியபோது பாரிய வேப்பமரமொன்று நடு (4-ம் பக்கம் பார்க்க

### புதுடில்லி திரும்பியதும் ராஜீவ் - கூட்டணி போராளிகள் சந்திப்பு?

புதுடில்லி, செப் 2 தற்போது ஹராரேயில் தங்கியிருக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நாடு திரும்பியதும் தமிழ்ப் போராளிக் குழுக்களையும் கூட்டணியையும் சந்திப்பார் என புது (4ம் பக்கம் பார்க்க)

### அவசரக் கூட்டம்

சகல லொறி உரிமையாளர்கட்கும்

முக்கிய அறிவித்தல்

முஸ்லீம் போக்குவரத்து ஒன்றிய லொறியில் உள்ள பொருட்கள் கடத்தப்பட்டமையால் வர்த்தகமும், பொதுமக்களும், லொறி உரிமையாளர்களும் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதனுல் அவர்கள் உங்களால் நடாத்தப்படும் லொறி சேவையில் தூர சேவை லொறியை சேவையில் கால வரையறையின்றி சேவையில் ஈடுபடுத்தாமல் தாங்கள் செய்யப்போகும் ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுள்ளார்கள். அதனுல் நாங்கள் இதைப்பற்றிய முடிவெடுப்பதற்காக முக்கிய கூட்டம் வியாழக்கிழமை (04-09-86) காலை 9-00 மணிக்கு ஞானம்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் நடாத்தவுள்ளோம். தவருது எல்லா லொறி உரிமையாளரும் சமுகம் கொடுக்கும்படி தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆ. மு. இராஜகோபால்

செயலாளர்

வட பிராந்திய லொறி

போக்குவரத்துச் சங்கம்.

(C-4401)

## இரத்தப் பெருக்கைத் தடுக்க 'ரெஸோ'வின் 'முதலுதவிப்பை'

யாழ்ப்பாணம், புதன். தாக்குதற் சம்பவங்களால் ஏற்படும் இரத்தப்பெருக்கைத் தடுத்துக்கொள்ளும் 'முதலுதவிப் பை'யைத் தமிழீழ மாணவர் பேரவை [ரெஸோ] பொது மக்களுக்கு வழங்கிவருகிறது. இதன் விலை 35 ரூபா மட்டுமே.

'ரெஸோ' விற்பனைசெய்யும் இந்த முதலுதவிப் பையை அவர்களின் 'நடமாடும் அம்புலன்ஸ்' வாகனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவம் முடியும்வரை இந்த முதலுதவிப் பை அங்குவைத்து வழங்கப்படுமென்று 'ரெஸோ' பேச்சாளர் தெரிவிக்கிறுர்.

### அதிரடிப்படைசுட்டு மூவர் பலி

(நமது நிருபர்)

வேலைமுடித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த 3 தொழிலாளர்கள் அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானுர்கள்.

நேற்றுப் பிற்பகல் 4-30 மணியளவில் மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. (மா)

## மாகாணசபைகளுக்கு நிதி பகிர்ந்திட ஆணைக் குழு நியமிக்க இந்தியா இலங்கைக்கு ஆலோசனை

கொழும்பு, செவ்வாய். இலங்கை இனப்பிரச்னைத் தீர்வின் ஒரு அம்சமாக நிதி ஆணைக் குழு ஒன்றை நியமிக்குமாறு இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு ஆலோசனையொன்றைக் கூறியுள்ளது. இந்த ஆலோசனைக் குழு மூலம் மத்திய அரசிலிருந்து மாகாண சபைகளுக்கான நிதி பங்கிடுதலை இலகுவாகச் செய்யமுடியுமென்பதே இந்திய அரசின் நோக்கமாகும்.

இந்த அடிப்படையில் இளைப்பாறிய சிவில உத்தியோகத்தர் வேர்ணன் பீரிஸ் தலைமை [4ம் பக்கம் பார்க்க]

# ஈழ விளம்பரம்

## விற்பனைக்கு

மல்லாகம் 4½ பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: P. இராசையா, 'தானியல் வாசம்' கோயில் வீதி, மல்லாகம். C 4389

புதிய வெளிநாட்டு குளிர் சாதனப் பெட்டி, புதிய வெளிநாட்டு Deep Freezer. தேக்கு அலுமாரிகள், Electric Cooker, Washing Machine, Choper Bike, கசட் றேடியோக்கள், வால்வ் றேடியோக்கள். Iron salf Kenwood chief, Electric cooking pan, Dressing Table மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு சி. பத்மநாதன், திருநெல்வேலி, வடக்கு. (திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில்) C 4392

மைசூர் அரிசி நம்பர்-1 கல்லில்லாதது, சுத்தமானது, தரமானது சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

## தேவை

பண்டத்தரிப்பிலுள்ள வைத்திய நிலையத்திற்கு ஒரு பெண் A M P. டாக்டர் தேவை. தங்குமிட வசதியுண்டு. 3 மாதங்களின் பின் வேலைநிரந்தரமாக்கப்படும். விண்ணப்பிக்க: விளம்பர இல: 4377 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். C 4377

சீமெந்து ஏற்றி இறக்குவதற்கு வேலையாட்களும் லேலன் (Leyland) டீசல் வேலையில் அனுபவமுள்ள மெக்கானிக்கும, வில் லுத்தகடு வேலை செய்யக்கூடிய வேலை ஆட்களும் தேவை தொடர்பு சிவலிங்கம் மோட்டேர்ஸ் 25 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். C 4386

## சேவை

தையல் வேலையில் அனுபவமுள்ள பெண்கள் தேவை மானிப்பாய் சுற்றுடலில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விளம்பர இல. C-4324 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C-4324]

இதோ எம்மிடம் எல்லாச் சாதி சமயத்திலும் டொக்டர் எஞ்சினியர், எக்கவுண்டன்ற் ஆசிரியர் சிறு தொழில் புரிவோர் ஆண், பெண் மணமக்கள் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். C 4224

## வகுப்புகள்

Montessori (மொண்டசொறி) பாலர் ஆசிரியர் பயிற்சிநெறி விரைவில் ஆங்கில மொழிமூலம் ஆரம்பமாகும். அத்துடன் Book-keeping வகுப்புகளும் ஆரம்பமாக உள்ளன. 15-ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும், தொடர்பு:- நிர்வாகி, தட்டச்சு, சுருக்செழுத்து, கல்வி நிலையம், கமறன் வளவு, மானிப்பாய். [மருதடிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில்] (C 4359)

## காணவில்லை

அச்சுவேலியிலிருந்து நேற்று முன்தினம் யாழ் வந்த தனியார் பஸ்ஸில் பேஸுடன் தேசிய அடையாள அட்டையும், தொலைத் தொடர்பு திணைக்கள அடையாள அட்டையும் மற்றும் சில முக்கிய தஸ்தாவேஜுகளும் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் தயவு செய்து கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். பொ. ஆனந்தநாயகி 181, அரசடி றோட், நல்லூர் யாழ்ப்பாணம். தொலைபேசி: 23654 C 4387

நல்லூர் கந்தா—கருணை வேலவனே
சரணம்—சரணம்—சரணம்

**விக்ன** டியூசன் சென்ரர், 52 ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**A/L 88** புதிய பிரிவு ஆரம்பம்: 6- 9- 86 காலை 11 மணி

**87** ஆண்டுக்கான புதியபிரிவு 8 மணிக்கு ஆரம்பமாகிவிட்டது.

கலை, வர்த்தக வகுப்புக்களுக்கான தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு.

பொருளியல்:- திரு. கிருஸ்ணனந்தன்,
வர்த்தகம்:- திரு. லங்கா,
கணக்கியல்:- திரு. வன்னியசிங்கம்,
அளவையியல்:- திரு. சுப்பிரமணியம்,
தமிழ்:- திரு. குழந்தை.
இந்துநாகரிகம்:- திரு. குணரெத்தினம்,
புவியியல்:- திரு. குணராஜா,
அரசியல்:- திரு. மஃறூப்.

முக்கிய குறிப்பு:- 87 ம் ஆண்டுக்கான DAY CLASS ஒரு மாதத்தின் பின் ஆரம்பமாகும். பெயர்களை இன்றுமுதல் பதிவுசெய்து கொள்ளவும். (A1302)

## மணப்பந்தல்

யாழ்ப்பாணம் உயர் சைவ வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த 29 வயதுடைய கப்பலில் பணியாற்றி தாயகம் திரும்பியுள்ள 2ல் செவ்வாயுள்ள உத்தராட நட்சத்திரமுடைய வாலிபருக்கு மணப்பெண் தேவை. சாதக குறிப்புடன் உடன் தொடர்பு கொள்ளவும் வி கமலநாதன் 31/1, சங்கிலியன்வீதி நல்லூர் C 4385

யாழ்ப்பாண உயர் இந்து வேளாள இனத்தைச்சேர்ந்த லக்கினத்தில் செவ்வாய் உள்ள பொறியியல் டிப்பிளோமா Dip in Elect. Eng ) பட்டம் பெற்று வெளிநாட்டில் உத்தியோகம் பார்க்கும் தற்போது விடுமுறையில் வந்திருக்கும் 30 வயதுடைய இளைஞருக்கு அதே இனத்தைச்சேர்ந்த படித்த அழகுள்ள 27 வயதிற் குறைந்த மணமகள் தேவை தகுந்த சீதன விபரங்களுடன் சாதகக்குறிப்பையும் அனுப்பி உடனே விண்ணப்பிக்கவும். விளம்பர இல. C 4391 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 4391

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ (A 1041)

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் பிறவுண் றோட்டில் வசித்து காலஞ்சென்ற சிதம்பரநாதக் குருக்கள் சங்கரநாராயண ஐயர் என்பவரின் மரணசாதனமின்றி இறந்த மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக.

- மரணமெய்திவர்.

வழ. இல. தத்துவப் /3983

சங்கரநாராயண ஐயர் கைம்பெண் சுந்தரகுணநாயகி இல. 27/4 இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

மனுதார்,

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொததை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12ம் நாளன்று முற்பகல் 9 00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு ஆவணி மாதம் 6ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
க. நாகேந்திரன்
பதிவாளர்.

வரைந்தது.
செ. யு. யேம்ஸ்,
மனுதாரின் சட்டத்தரணி.
C 4378

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் (பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்)

சொத்தறுதியில்லாது காலஞ்சென்ற காரைநகர் கிழக்குகளபூமிதன்னை கந்தையா நடராசாவின் மரணச் சொத்துக்கள் தொடர்பிலான விடயம் சம்பந்தமாக.

— காலஞ்சென்றவர்

கந்தையா நடராசா கைம்பெண் சிவமணி, கரப்பிட்டியந்தனை, களபூமி, காரைநகர் கிழக்கு.

— மனுதாரர்

வழ. இல. தத்துவம்/110

எதிர்

1. வெற்றிவேலு கந்தையா கைம்பெண் தெய்வானை, தன்னை, களபூமி, காரைநகர் கிழக்கு.
2. கந்தையா நடராசா மகள் லோகேஸ்வரி, கரப்பிட்டியந்தனை. சளபூமி காரைநகர் கிழக்கு [தனது வழக்குப் பாதுகாவலர் சங்கரப்பிள்ளை அமிர்தலிங்கம் மூலம் தோற்றுகின்றார்.]

— எதிர்மனுதாரர்கள்

மேலே உள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறித்த காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986 ம் ஆண்டு புரட்டாதி மாசம் 10 ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்

1986 ம் ஆண்டு ஆவணி மாதம் 8ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி.
சு. வ. கணேசன்.
பதிவாளர்.

வரைவு,
எஸ். ஏ. ஈ. ஏகநாதன்,
மனுதாரரின் சட்டத்தரணி.
(C 4366)

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மல்லாகம் கோட்டைக்காட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகர் விசுவலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லாத மரணச்செத்துக்களினதும் உடமைப் பொருள்களினதும் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

இல. மரணசாதன நியாயாதிக்கம் } T 287

முருகர் விசுவலிங்கம் பெண் பவானந்தராணி கோட்டைக்காடு, மல்லாகம்.

எதிர் மனுதார்.

1 விசுவலிங்கம் மகள் விஜிமயூரா கோட்டைகாடு, மலலாகம்.
2. கதிரன் முருகன் சிவன் கோவிலடி மட்டுவில் தெற்கு பராயமற்ற 1ம் எதிர்மனுதாரர் பாதுகாவலர். [illegible]

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்துக்களை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

வரைவு
க. குணரத்தினம்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 4374)

உ
சிவமயம்

## திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் அக்ஷய ஆண்டு ஆவணி மாதம் 20-ம் நாள் (5- 9- 86) வெள்ளிக்கிழமை மாலை 6-04 மணிமுதல் 6 51 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது புத்திரன் திருவளர் செல்வன் **சிவானந்தன்** [ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பழை ] அவர்கட்கும் | எமது புத்திரி திருவளர் செல்வி **தனலட்சுமி** அவர்கட்கும் |

திருவருள் துணைகொண்டு கட்டுவன் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ள திருமாங்கல்ய தாரண வைபவத்தில் சுற்றம் சூழச் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| திரு. திருமதி வ. கணபதிப்பிள்ளை, தண்ணீர் தாழ்வு, கட்டுவன், தெல்லிப்பழை. | திருமதி செ. முத்தம்மா, வறுத்தலைவிளான், தெல்லிப்பழை. |

மணமகள் வீட்டாரின் அழைப்பு.
(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.)
(C 4347)

### மணிவாக்கு

மூவர் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்வார்களானல் ஆறு பேரின் சுமையை இலகுவாக சுமப்பார்கள். — ஜோர்ஜ் ஹேர்பர்ட்.

## நமது நோக்கு

# அணிசேரா நாடுகளின் உச்சி மகாநாடு

'நான்' என்பது அகங்காரத்தையே குறிக்கும் என்பார்கள். சமூக வாழ்வில் ஈடுபட்டுள்ள ஒரு மனிதன் 'நான்' என்ற முனைப்போடு செயல்படுவானுகில் தன்னைத்தான் தனிமைப்படுத்திக்கொள்கின்ருன் என்பதே பொருள். இதன் விளைவுகளை அவன் தன் வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களிலும் எதிர்நோக்கவேண்டியிருக்கும்.

தனிமனிதனுக்கு மட்டுமல்ல சமூக ஸ்தாபனங்கள் தொடக்கம் தேசிய, சர்வதேசிய மட்டங்களிலும் கூட இது பொருந்துவதைப் பார்க்கலாம்.

புதிதாக சுதந்திரமடைந்த நாடுகள் பல சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இப்படியான ஒரு நிலைக்கு தள்ளப்பட்டிருந்தன.

தனித்து நிற்பதா, ஏதாகிலும் வல்லரசு அணியில் சேர்ந்துகொள்வதா என்ற பிரச்னை எழுந்தது. அன்றைய காலகட்டத்தில் இராணுவரீதியிலான இரண்டு முகாம்கள் திறந்துவிடப்பட்டிருந்தன. ஒன்று மாஸ்கோ தலைமையிலான வார்ஸோ ஒப்பந்த நாடுகளின் மூகாம். மற்றது அமெரிக்க தலைமையிலான நேட்டோ (NATO) ஒப்பந்த நாடுகளின் முகாம். யூகோஸ்லாவியாவின் பெல்கிரேடில் கூடிய மேற்கூறிய மூன்ரும் உலக நாடுகளின் தலைவர்கள் இந்த நிலைமை பற்றி வெகுவாக ஆராய்ந்தார்கள். போரிஞலும் ஏகாதிபத்திய சுரண்டல்களினுலும் சீரழிந்துபோய்க் கிடந்த தமது பொருளாதாரத்தை தமது நாடுகளின் சூழ்நிலைக்கும் மக்கள் தேவைகளுக்கும் ஏற்றவிதத்தில் விரைவாக சீரமைத்துக்கொள்வதற்கு ஆக்கம் தரும் விதத்தில் ஒரு அமைப்பை உருவாக்கிக் கொள்ள அவர்கள் தீர்மானித்தார்கள் அதன் காரணமாகப் பிறந்ததே 'நாம்' [NAM] என்று அழைக்கப்படும் அணிசேரா இயக்கம் [Non Aligned Movement].

இந்த 'நாமி'ல் பல்வேறு அரசியல் சித்தாந்தங்களைக் கொண்ட நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஒன்றுக்கொன்று உதவுவதிலும், சர்வதேச விவகாரங்களில் ஒருமித்த கருத்தினை உருவாக்கிக்கொள்வதிலும் இவைகளுக்கிடையில் ஒற்றுமை நிலவுகின்றது. மேலாதிக்க வல்லரசுகளின் போட்டா போட்டிகளில் இருந்து தப்பிக்கொள்ளவும். அவைகளின் பகடைக்காய்களாய் பயன்படாதிருக்கவும் முடிகின்றது.

'நாம்' உருவாவதற்கு பணியாற்றிய நாடுகளில் இந்தியா முக்கிய இடத்தை வகித்தது அதே போல் 'நாமின்' கொள்கைக்கேற்ப இந்தியாவால் ராக்குப் பிடிக்கமுடியுமாத என்ற வகையில் ஏற்பட்ட சோதனைகளையும் அந்த நாடுசிறப்பாக சமாளித்துக் கொண்டமை கவனத்திற்குரியது.

1962ம் ஆண்டு சீனவுக்கும் இந்தியாவுக்குமிடையில் எதிர்பாராத விதமாக எல்லைச்சண்டைகள் மூண்டபொழுதும் 1965ல் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் எல்லைப் போர் மூண்டபோதும் அன்று இந்தியா வல்லரசு முகாம்களை நோக்கிச் செல்லாதுஅணிசேராக் கொள்கையைப் பற்றிநின்றமை குறிப்பிடத்தக்கது.

21 நாடுகள் மட்டும் அங்கம்வகித்த இந்தஸ்தாபனத்தில் இன்று 101 நாடுகள் இருக்கின்றன. அதன் 25வது மகாநாடு தென்னுபிரிக்காவின் எல்லையுடன் ஒட்டியுள்ள சிம்பாப்வேயின் தலைநகர் ஹராரேயில் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

வெள்ளையர் ஆட்சியை ஒழித்து கறுப்பின மக்களான சுதேசிகளின் ஆட்சியை ஏற்படுத்திய அந்த நாட்டுத் தலைவர் முகாபே அடுத்த மூன்று ஆண்டுகளுக்கும் தலைவராக இருக்கப் போகிருர்

இப்போதைய மாநாட்டில் தென்னுபிரிக்க வெள்ளையர் ஆட்சியின் நிறவெறிக் கொள்கைக்கு எதிராக 'நாம்' எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும், நமீபியாவிற்கு ஐ நா. தீர்மானத்துக்கமைய சுதந்திரம் பெற்றுக்கொடுப்பதுமே முக்கிய அம்சங்களாகவிருக்கப்போகின்றன.

தலைமைப் பதவியைக் கையளிக்கும் விதத்தில் அதன் முன்னுள் தலைவர் திரு. ராஜீவ் காந்தி நிகழ்த்தியுள்ள சுருக்கமான சொற்பொழிவில் அணிசேரா நாடுகள் தங்களின் பொருளாதார வளங்களை வலுப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் தொழில் நுட்பத் துறைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார்.

உரிமைக்காகப் போராடும் எந்த ஒரு சமூகமும் தனது பொருளாதாரத்தைச் சீரழியாமல் பார்த்துக்கொண்டால் மாத்திமே நீடித்த காலம் போராட்டத்தை நடத்த முடியும். இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் சுதேசிய உற்பத்திகளுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் நினைவு கூரத்தக்கது.

இதையே ராஜீவ் காந்தி ஆபிரிக்காவிலும் ஏனையபகுதிகளிலும் சுதந்திரத்திற்காகப்போராடும் மக்களுக்கு எடுத்துக் கூறியிருக்கிருர்.

---

**உலக அரங்கு** **அவதானி**

# வளரும் நாடுகள் பல இயற்கையின் சீற்றத்துக்குப் பலி! சப் ஸகாரா நாடு கமரூனில் "நச்சுப்பொய்கைச் சருக்கம்" அணிசேரா இயக்கம் இச்சவாலை அலட்சியம் செய்வதா?

### கமரூன்

தென் ஆபிரிக்காவில் மனிதனின் கொடுமை மலை போல் வளர, சப் சகாரா நாடாகிய கமரூன்வடபகுதியில் எரிமலை வெடித்துக் கக்கிய நச்சுவாயு இன்று சுமார் 1500 க்கு மேற்பட்ட மனித உயிரைக கொன்றுவிட்டது.

காயப்பட்டோர் சில ஆயிரம். ஆடுமாடு பெரும் அவஸ்தைக்குள்ளாகி கால்களை வானுக்குயர்த்தியவண்ணம் மல்லாந்து மாண்டு கிடப்பதும் பெருங் கண்ராவியாகக் காணப்படுகிறது.

இறந்தவர்களின் சடலங்கள் ஒன்ருகப் போடப்பட்டு அடக்கம் செய்யப்படுகின்றன. காயப்பட்டவர்களுக்கும், அபாய இடங்களிகலிருந்து தெறிகெட்டுவரும்மக்களுக்கும் ஐ.நா.அழிவு நிவாரண படை ஆவன செய்கிறது. இன்னும் பல்லாயிரம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்படுகின்றனர்.

மலைச்சாரலை அணித்தாயுள்ள சுகுப் நியோஸ் போன்ற கிராமமக்கள் முற்ருகவே அழிக்கப்பட்டனர் தகரத்தாலும் ஓலையாலும் வேயப்பட்ட வீடுகளில் வாழ்ந்துவந்த வறிய மக்கள் நச்சுவயுவின் சீற்றத்துக்குப் பலியாகினர்.

### பிணக்காடு

நீருக்குக்கீழேயுள்ள எரிமலை வெடிப்பால் ஏற்பட்ட சடுதியான நச்சுவாய்வின் தாககம் மக்களை மயக்கியதும் உடனடியாக கொன்றுவிடுகிறது உயிர் தப்பியவர் குறிப்பிடும் மசாகசம்பவம் 'இன்று நாடு நாளை பிணக்காடு' என்ற உண்மையைத் துலக்குகிறது

இன்று கமரூனில் இவ்வித அழிவு; சென்ற வருடம் தென் அமெரிக்காவின் கொலம்பியாவில் இதுபோன்ற சம்பவம் பேரழிவை உண்டாககியது இன்னும் மத்திய அமெர்க்காவில், கரிபியன் தீவுகளில் இயற்கையின் குமுறல் அழிவில் முடிகிறது

நச்சுவாயு என்பதும் இந்தியாவின 'போபால்' பேரழிவு குறிப்பிடவேண்டியது அது இயற்கையின் பொறுப்டல்ல மனிதனின்விஞ்ஞான தொழில் நுட்ப பிரயோகம் பிழைத்ததால் ஏற்பட்ட உலகின் பேரழிவு

நாம் இங்கு வற்புறுத்துவது எரிமலைவெடிப்பால், பூகம்பத்தால், வெள்ளத்தால், வெந்தழலால் காலத்துக்குக்காலம் பல்லாயிரம் மக்கள் அழிந்து போகின்றன . உயிரினம், உடைமை முற்ருக அழிந்து போகின்றன குறிப்பாக இந்தியாவில் வருடாவருடம் ஏற்படும் வெள்ளப்பெருக்கு எத்தனை அனர்த்தங்களை முறை தவருது ஏற்டுபடுத்துகின்றது?

### நச்சுப் 'பொய்கை'

இன்று கமரூனில் காணப்படும் அழிவு மிக விசித்திரமானது 'லேக்நயஸ்' என்றகுளம் 'good lake' என்று மக்களால் அழைக்கப்பட்டுவந்தது. இந்த எரிமலை வெடிப்பின் விளைவால் அதுமகாபாரதத்தில் வரும் 'நச்சுப் பொய்கைச் சருக்கத்தின்'' கதையை நினைவூட்டுகிறது

இருமல், காய்ச்சல் கூச்சல், வாந்தி. திடீர் ஒருபக்க பாரிச வாதம் போன்ற சேட்டைகளுடன் தொடங்கி சடுதியிற் கொல்லும் தன்மையுடையதே இந்த நச்சுவாயு

கமரூன் அழிவுக்கு தடுப்புத் திட்டமகிடையாதா? இந்த அபாய பிரதேசங்களில்வாழும் மக்கள் வறுமையாலும், அறியாமையாலும் பீடிக்கப்பட்ட ஏழைமக்களே இவ்வித அழிவுக்குப் பலியானதும் உயிர் தப்பினவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் விரையும் ஐ நா போன்ற உலக நிறுவனங்களும் செல்வநாடுகளும் நிரந்தர தடுப்புத் திட்டங்களுக்கு உதவ முடியாதா?

### நாம் (NAM)

எட்டாம் மாநாட்டை சிம்பாப்வேயில் இன்று நடத்திக் கொண்டிருக்கும் அணிசேரா இயக்கம்வல்லரசுகளைத் திட்டி வருவதில் வெற்றி காணலாம். ஆனல் வறுமையில் வாழும் இவ்விதநாடுகள் இயற்கை அழிவுக்குப் பலியாவதைத் திட்டமிட்டுத் தடுக்க அமெரிக்கா போன்ற செல்வநாடுகளின் உதவி தவிர்க்க முடியாதது.

எனவே 101 நாடுகள் கொண்ட நிறுவனம் இது வரையில் அமெரிக்காவைக் கண்டித்து 50 வில்வங்கள் சாத்தி அர்ச்சனை நடத்திவிட்டார். இனியாவது செல்வவாதத்தில்நம்பிக்கைகொண்டு செல்வ நாடுகளின் உதவி ஒத்துழைப்பை உதாசீனம் செய்யாது சமத்துவ நிலையில் தெற்குப் பரிகாரம் காணவேண்டும் விஞ்ஞானத்தால் மட்டும் பூரண முன்னேற்றம் முடியாது அஞ்ஞானம் அகல வேண்டும்

கமரூனில் உண்டான பேரழிவு இயற்கையானதென்பது தெளிவு ஆனல் அந்த நாட்டின் அரசியல் மக்களின் அவல நிலையின் இன்னெரு அம்சமாகும். 13 வருடம் இஸ்ரேலுடன் தொடர்பைத் துண்டித்திருந்த கமரூன் இன்று இஸ்ரேல் பிரதமர் ஷைமன் பேரோஸை வரவேற்றிருக்கிறது. ராஜதந்திர உறவு மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது அரபுநாடுகளுக்கும்குறிப்பாகபீ எல் ஓவிற்கும் இக்கொள்கை மாற்றம் அதிருப்தியளித்திருக்கிறது

மனிதனும் மண்ணும் ஸ்திரமற்ற நிலையில் தத்தளிக்கும் காட்சி ஆபிரிக்க நாடுகளில் சர்வசாதாரணம்.

---

## நல்லைக் குழகன்

பழங்கொடாக் கோபத்தாற் பாய்ந்தோடிப் போந்து
பழநியிலே வீற்றிருந்த பாலன் - மழவனவன;
நல்லைக் குழகன் நறுந்தீர்த்தம் ஆடியெமக்(கு)
அல்லல் அறுப்பான்ன அண்டு.

★ ★

அண்டினேர் தம்மை ஆதரிப்பான் நல்லூரான்
வண்டார் குழல்தெய்வி வள்ளியுடன் - தண்மைசெறி
தீர்த்தத்தை யாடித் திளைத்துத் தமிழர்துயர்
தீர்த்துவைப் பானே தினம்.

★ ★

தினமும் அடியார்கள் சிந்திக்கும் சேந்தன்
மனமபொங்கத் தீர்த்தத்தை யாடி - இனப்பிரச்னை
தீரத் திருநல்லைச் சேந்தனருள் செய்திடுவான்
வாரப்பா டோடு வணங்கு.

— கவியரசு வெண்பாமணி முருகசூரியன்.

[இன்று நல்லூர்க்கந்தன் (தீர்த்தத்திருவிழா)
25-ம் திருவிழா

மழவன் — கட்டிளமையயான் வீரன்

---

## நல்லூரிற் காண்கின்ற நயம் வருமோ!

கனிதந்தே ஒளவையைக் கனியச்செய்த கந்தவேளே
சண்ணுதலான் கணபதிக்கு மாங்
கனி தந்தாரென்றே பனங்கவன்று கைலைவிட்டுக்
கடுகியே பழனமசென்ற கங்கேயா!
கனிவான தமிழ்கொண்டே காதலுடன் நக்கீரன்
கசிந்துருகிப்பாட அருள்செய் கதிர்வேலா!
கனிவாக வளர்ந்தருள்வாய் கலியுக வரத! கற்றோர்கள்
போற்றுகின்ற கவின்பெறு நல்லூரானே!

செப்பிடவே முடியவில்லை, சேயர்படும் துரங்களை
சேர்ந்திருந்தே பழிக்கின்ருர் செல்லக்குமரா
மூப்படையும் செய்கின்ற மோசங்கள் போதாதோ மிகக்
கப் ங்கள் கேட்கின்ற காவற்படையெதற்கு?
தப்பவே வழியுமில்லை தணிகேசாவுன் தயவில்லையேல்
தவிக்கின்ருேம்; குழிபுகுந்தே வசிக்கின்ருேம்;
எப்படியும் காப்பதுன் கடனேயையா! அன்பர்
இடர்களைந்தே யருளும் முருகையா!

—பொலிகை செ. சின்னையா.

# யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு 4 லட்சத்து ஐம்பதினாயிரம் பாடபுத்தகங்கள் விநியோகிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், புதன்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு நான்கு லட்சத்து ஐம்பதினாயிரம் பாடப் புத்தகங்கள் இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கு மொத்தமாக 5 லட்சம் பாடப்புத்தங்கள் தேவை. இதுவரை வந்து சேர்ந்த புத்தகங்களைவிட இன்னும்வரவேண்டிய புத்தகங்கள் விஞ்ஞானம், கணிதம் சமூகக்கல்வி போன்ற பாடப் புத்தகங்களேயாகும். இவை 7-ம், 8-ம், 9-ம் ஆண்டுகளுக்குரியவை.

இப்புத்தகங்களின் அச்சு வேலைகள் முடியவில்லை. அத்துடன் சில புத்தகங்கள் சிங்கள மொழியிலிருந்து மொழிபெயர்த்தும் முடியவில்லை. இதனுல் இப் பாடப்புத்தகங்கள் கொழும்பிலிருந்து வருவதில் காலதாமதமேற்படுகிறது எனத்தெரிவிக்கப்படுகிறது.

யாழ். கல்வித்திணைக்களம் ஒருலட்சத்து பதினேளாயிரம் புத்தகங்களை பலத்த சிரமத்தின் மத்தியில் அண்மையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வந்தது தெரிந்ததே. [ச - ஒ]


## கடைசி நேர வரி விளம்பரம்

## தவறிவிட்டது

சோமசுந்தரம் மகாதேவன் வேலணை கிழக்கு, வேலணை-4 என்பவரது அடையாள அட்டைஇலக்கம், 670550885V வேலணை அராலி துறைமுகத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு கூர்ந்து மேறபடி விலாசத்திற்கு தபாலிலோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுககொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும்.

(C 4400)


## புதுடில்லி---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டில்லி ராஜதந்திர வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது

ஹராரேயில் நடைபெறும் அணிசேரா இயக்கத்தின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றுள்ள ராஜீவ் இம்மாதம் 7-ம் திகதியளவில் நாடு திரும்புவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதையடுத்து அடுத்தவாரமளவில் கூட்டணியும், போராளிக் குழுக்களும் ராஜீவைச் சந்திக்க புதுடில்லி அழைக்கப்படலாம் ஆயினும் ராஜீவ் இருதரப்பினரையும் ஒன்ருகவா அல்லது தனித் தனியாகவா சந்திப்பார் என்பதை இந்த வட்டாரங்கள் ஊர்ஜிதப்படுத்தவில்லை.

(கூ - ஊ)


## ஓராண்டு நினைவுஅஞ்சலி



சா தனபாலசிங்கம்

[பெரியராசன், ராம்]

மண்ணில்:

27 - 09 - 59

தாய் மண்ணிற்கு!

03 - 09 - 85

எங்கள் அன்பு நண்பரே நீங்கள் எங்களைப் பிரிந்து ஓராண்டாகின்றதுஉங்கள் தியாகங்களும், உயர்ந்த பண்புகளும் என்றும் எம் நெஞ்சில் நிலைத்திருக்கும். மறைந்தும் மறையாத உம்மை மறந்தும் மறவாத தமிழ்ஈழம்.

கிளாலை,

நண்பர்கள்.

(C 4398)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் சவரி குரூஸ்

(முன்னைநாள் துறைமுக கூட்டுத்தாபனம்)

பிறப்பு: 10 - 01 - 1903

மறைவு; 04 - 08 - 1986

அன்பின் திருஉருவாய் அறிவின் ஒளிவிளக்காய் எம்மையெல்லாம் வழிநடத்திச்சென்றீரே எங்கு சென்றீர் நீர் அடிக்கடி சொல்லும் தத்துவ முத்துக்கள் இன்றும் எம்மை வழி நடத்திச் செல்ல ஏதுவாயுள்ளன.

அன்னரின் ஆத்மசாந்திக்கான பாடற்பூசை 03 - 09-86 செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை சூசையப்பர் ஆலயத்தில் நடைபெறும்.

துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[C-4399]

## வீகோ

காலை 10-30, 2-30, 4-30, 6-30.

பாக்கியராஜ்-அம்பிகா நடித்த

அந்த 7 நாட்கள்

[கலர், புதிய பிரதி]

## வெலிங்டன்

வெள்ளித்திரையில்

10-30, 2-30, 4-30 6-30

ரிக்டானிக்கப்பலில் மீட்பு நடவடிக்கை உண்மைச் சம்பவம்.

RAISE THE TITANIC


# "குரும்பசிட்டி மினிமுகாம்மீது தாக்குதல் நடத்தியதில் படையினர் 4 பேர் பலி!"

## -ஈ.பி.ஆர்.எல்.எவ்.

யாழ்ப்பாணம், புதன்.

குரும்பசிட்டியிலுள்ள தனியார் மருத்துவ மனையொன்றில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர்மீது நேற்று முன்தினம் மக்கள் விடுதலைப் படையினர் மோட்டார் ஷெல் தாக்குதல் மேற்கொண்டதில் நான்கிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், சிலர் படுகாயமடைந்ததாகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"மக்கள் விடுதலைப் படையின் மோட்டோர் ஷெல் தாக்குதல்களாலும், சக இயக்கப் போராளிகளின் தாக்குதல்களினுலும் வயாவிளான் மகாவித்தியாலயத்தைவிட்டு வெளியேறிய சிறிலங்கா இராணுவம் குரும்பசிட்டியிலுள்ள தனியார் மருத்துவ மனையொன்றில் முகாமிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி சுற்றிவரவுள்ள மதில்களை உடைத்தும், பற்றைகளை வெட்டியும் குரும்பசிட்டியில் தாம் அமைத்துள்ள மினி முகாமைப் பலப்படுத்தும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். இதனைத் தடுக்க மக்கள் விடுதலைப் படையினர் மோட்டோர் ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர்.

இம்மோதலில் மக்கள் விடுதலைப் படை வீரர் ஒருவர் காயமடைந்தார். [மா]

# அதிரடிப்படையினர் ரோந்து சென்றபோது குண்டுவெடிப்பு, சூட்டுசத்தம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கண்மையில் உள்ள கள்ளியன் காடுவட்டாரத்தில் அதிரடிப்படையினர் ரோந்து சென்றுகொன்டிருந்த சமயம் துப்பாக்கிவேட்டுக்கள், குண்டு வீச்சு சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன.

நேற்றுமாலை இச்சம்பவம் நடைபெற்றது.

ரோந்து சென்று கொண்டிருந்த அதிரடிப்படையினர் கல்லடி முகாம்நோக்கித்திரும்பிக் கொண்டிருந்தபொழுது இருவரின் சடலங்களை தமது வாகனங்களில் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

# இராணுவம் துப்பாக்கிப்பிரயோகம் வயோதிபர் ஒருவர் பலி; இரு சிறுவர்உட்பட ஐவர் கைது

மட்டக்களப்பு, செவ்வாய்

தேடுதல் நடவடிக்கையிலீடுபட்டிருந்த இராணுவத்தினர் கருவாடு காயப்போட்டிருந்த மீன்வாடியைநோக்கிதுப்பாக்கி ப்ரயோகம் செய்ததில் வயோதிபர் ஒருவர் பலியானுர். மற்றும் 10 வயதுக்குட்பட்ட இரு சிறுவர்களுட்பட 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

அல்லைத் திட்டத்திலுள்ள நடுமதுரை என்னுமிடத்தில் இப்பரிதாப சம்பவம் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கதிரவெளி அகதிகள் முகாமில் திருமலையிலிருந்து அகதிகளாக வந்தவர்கள் இருக்கிறுர்கள்.

இந்த அகதிகளில் லுள்ள 6 பேர் அல்லைத்திட்டத்திலுள்ள நடுமதுரை இடத்துக்குச் சென்று மீன்வாடி அமைத்து அங்குள்ள குளத்தில் மீன்பிடித்துக் கருவாடு காயப்போட்டுக் கொண்டிருந்தனர்.

இவர்களிருந்த மீன்வாடியை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் கொஞ்சும்கிளி (60வயது) என்பவர் ஸ்தலத்திலேயே பலியானுர்.

இச்சம்பவம் குறித்து மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்குப் புகார்செய்யப்பட்டுள்ளது. (மா)

# தடுப்பு முகாமில் இருந்தவர்களுக்கு அடிகாயம்

(மட்டக்களப்பு நிருபர்)

கிரான் அதிரடிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலையான இரு இளைஞர்கள் பலத்த அடிகாயங்களுடன் மட்டக்களப்பு ஆஸ்பததிரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இருஇளைஞர்களும் களுவாங்கேணி, வந்தாறுமூலையைச் சேர்ந்தவர்கள். [மா]

## மாகாணசபை---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலான மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குழுவொன்று இலங்கையிலிருந்து இந்தியா சென்று அங்கு மாநிலங்களுக்கு நிதி பகிர்தலைச்செய்யும் அமைப்பு முறையை ஆராய்ந்துள்ளது.

இந்த நிதிபகிர்தல் அமைப்பு முறை மிகவும் திருப்தியானதெனவும், இலங்கைக்கு ஏற்புடையதானதெனவும் இத் தூதுக்குழு கண்டுள்ளது. [கே]

## கல்முனையில்

# பாதுகாப்பு நடவடிக்கைக்கு அதிரடிப்படையினர்

(மட்டக்களப்பு நிருபர்)

முஸ்லிம்களின் வேண்டுகோளின்பேரில் கல்முனையில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் நேற்று வாபஸ் பெறப்பட்டு அதிரடிப்படையினர் அமர்த்தப்பட்டுள்ளனர். இதனையிட்டு தமிழ் மக்கள் மத்தியில் அச்சம் தோன்றியுள்ளது.

கடந்த சில தினங்களாகக் கல்முனையில் இடம்பெற்ற முஸ்லிம் தமிழ்கலவரங்களைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினர் அனுப்பப்பட்டிருந்தனர். இதனை முஸ்லிம் மக்கள் எதிர்த்து முஸ்லிம் அமைச்சர்களுக்கு புகார் செய்தனர்.

முஸ்லிம் அமைச்சர்கள் இராணுவத்தினரை வாபஸ் வாங்கி அதிரடிப்படையினரை அமர்த்துமாறு ஜனதிபதியிடம் கேட்டதைத் தொடர்ந்து நேற்று அதிரடிப் படையினர் சேவையிலமர்த்தப்பட்டுள்ளனர். (மா)


மிது வீடியோ மூவீசாரின்

இன்றைய புதிய வெளியீடு

அர்ஜுன், சாதனு, ஜெய்சங்கர்.

தேங்காய் சீனிவாசன் நடித்த

குளிர்கால மேகங்கள்

(தரமான பிரதி)

மிது வீடியோ மூவீஸ்,

பிரதான வீதி, சித்தன்கேணி.

[A-1225]


## கனகபுரம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வால் முறிந்துவிழுந்துள்ளது காணக்கூடியதாக இருந்தது.

நேரடிமோதல் இடம் பெற்ற இடத்திலுள்ள வீடுகளெல்லாம் துப்பாக்கி வைகள் தாக்கி சல்லடையாகக் காட்சியளிக்கின்றன.

வீடுகளிலுள்ள மா, பலா, தென்னை மரங்களும் முறிந்து காணப்படுகின்றன மின்கம்பங்குகள்பலமுறிந்தும்வயர்கள் அறுந்தும் காணப்படுகின்றன.

இராணுவத்தினர் பங்கியிருந்து வெடிவைத்த மரங்களுக்கு அருகாமையில் பலஇடங்களில் அங்காங்கே இரத்தம் காணப் படுகின்றது.

கனகபுரம் முறிப்புரூேட்டில் நேரடிமோதல் நடைபெற்ற இடத்தில் மின்கம்பம் ஒன்றிற்குப் பக்கத்திலிருந்தே இத்துப்பாக்கிகண்டெடுக்கப்பட்டது.

துப்பாக்கி கண்டெடுக்கப்பட்ட இடத்தில் இரத்தம் காணப்படுகிறது. இத்துப்பாக்கியை வைத்திருந்த இராணுவ சிப்பாய் இறந்திருக்கலாம் அல்லது படுகாயமுற்று அபாயகரமான நிலையில் எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாமென நம்பப்படுகிறது.

இராணுவத்தினர் பின்வாங்கியபின் அவர்கள்நின்றஇடத்திற்குச் சென்றபோராளிகள் அங்கிருந்தே பல துப்டாக்கிரைவகளையும், ஷெல். கிறனேற் ஆகியவற்றையும் கண்டெடுத்துள்ளனர்.

## வாசவிளான்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

னர் பாடசாலைக்குள் நுழைந்தனர்.

படையினர் பலாலி முகாமை விட்டு வெளியேறியபோது அங்கிருந்து சரமாரியாக 'ஷெல்' தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. இந்த 'ஷெல்' தாக்குதல்களால் பல பொது மக்கள் காயமடைந்துள்ளனர். வி மகேஸ்வரி (வயது ९5) என்பவர்படுகாயமடைந்துள்ளார் குரும்டசிட்டி முத்துமாரி அம்மன் ஆலய ஒரு பக்கச் சுவரும் சேதமடைந்துள்ளது.

மேலும் நேற்றிரவு ஏழு மணி முதல் பலாலி முகாமிலிருந்து பலமணிநேரம் 'ஷெல்' தாக்குதல் இடம்பெற்றது. இத்தாக்குதலின்போது அப்பகுதியைச் சமீபித்துள்ள குரும்டசிட்டி, குப்பிளான் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அங்கிருந்து வெளியேறிப் பாதுகாப்பான இடங்களை நாடி விரைந்தனர் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை 'ஷெல்' தாக்குதலால் ஏற்பட்ட சேத விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. [கே]

## சபிண்டீகரணக் கிரியை அழைப்பு



**அமரர் கே. வி. எஸ். சண்முகநாதன்**

தோற்றம்: 13-08-1926

மறைவு: 14-08-1986

14-8-86 அன்று முருக பதமடைந்த எமது அன்புக்குரியவரின் சபிண்டீகரணக் கிரியை வைபவம் எமது இல்லத்தில் 4-9-86 வியாழக்கிழமை பகல் 11-00 மணியளவில் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வைபவத்தில் பங்குகொண்டு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்.

'கந்தன் கருணை'
நல்லூர். C 4397


# கடற்றொழிலாளர்களிடம் வெளிஇணைப்பு இயந்திரம் பறிமுதல்; வலைகள் நாசம்

வல்வெட்டித்துறை, செவ்:

வல்வெட்டித்துறை, பொலிகண்டி பகுதிக் கடலில் நேற்று காலை மீன்பிடித்துக் கொண்டிருந்த கடற்றொழிலாளர்களை கடற்படையினர் கடுமையாக எச்சரித்ததுடன் சிலரது அவுட் போட் மோட்டர் என்ஜின்களையும் களற்றி தம்முடன் எடுத்துச் சென்றனர். சிலரது வலைகளையும் வெட்டி விட்டுச் சென்றனர்.

இவற்றைத்தம்முடன் எடுத்துச் சென்ற கடற்படையினர் டிமாண்ட் சப்ளை அல்லது றிசீப்ட் நோட் என்னும் பத்திரத்தில் சிஓ/எஸ் எல் என் எஸ் ராஸகாஎன கையொப்பமிட்டு ஒவ்வொரு கடற்றொழிலாளரிடத்தும் ஒரு பத்திரத்தைக் கொடுத்து ஒரு வாரத்தின்பின் காரைநகர் கடற்படை முகாமுக்கு வரும்படி பணித்து இனிமேல் கடலில் மீன்பிடிக்க வரக்கூடாது எனவும் எச்சரிக்கை செய்து கரைக்குப் போகும்படி பணித்தனராம்.

தமது உடமைகளை இழந்த கடற்றொழிலாளர்கள் வலித்துக்கொண்டு ஒருவாறு கரை வந்துசேர்ந்தனர். கடற்படையினரால் கொடுக்கப்பட்ட பத்திரங்களையும்கொடுத்துநடந்த சம்பவங்களைப் பற்றியும் கடற்றொழிலாளர்கள் வல்வைப்பிரஜைகள்குழுவினரிடம் கூறியதைத்தொடர்ந்து வல்வை பிரஜைகள் குழுவினர் யாழ். அரசஅதிபரை சந்தித்துசம்பந்தப்பட்ட படை அதிகாரிகளுடன்பேசி அவற்றை மீட்டுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## சங்காபிஷேகம்

கொழும்புத்துறை, செவ்

தொல்புரம் மத்தி கொட்டடிப்பதி அருள் மிகு ஆதி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த சங்காபிஷேக மகோற்சவம் எதிர்வரும் 6 ம் திகதி 1008 சங்காபிஷேகத்துடன் நடைபெறும்

விசேஷ அபிஷேக பூஜையுடன் அம்பாள் வீதி உலாவும் இடம்பெறும் ஆலய. பரிபாலன சபையும், தொல்புரம் மத்தி இந்து மாமன்றமும் அன்னதானம் வழங்கவுள்ளன. (எ)

## சமாதான சபை

யாழ்ப்பாணம், புதன்

கோண்டாவில் வடக்கு அன்னங்கை இளைஞர் சன சமூக நிலையத்தின் சமாதான சபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டது. பின்வருவோர் நடப்பு வருட நிருவாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் மி. தர்மலிங்கம், செயலாளர். கு. ஸ்ரீ காந்தன், பொருளாளர் பொ. இராஜேந்திரன், உறுப்பினர்கள் ம. யோகேஸ்வரன், த. குணாளன், து. அருமைராஜா, இ. இளங்கோ.


## கேள்வி அறிவித்தல்

**வவனியா நகரசபை.**

நவீன சந்தைச் சுற்றுவட்ட வீதி 2ம் இலக்க கடையை வாடகைக்கு கொடுப்பதற்கான கேள்விகள் 24 9-86ம் திகதி நண்பகல் 12 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விகள் 22-9-86 ம் திகதி பிற்பகல் 3-00மணிவரை கேள்விப் பிணைப்பணமாக ரூபா 1000/-மும் கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 100/-ம் செலுத்துவதன் பேரில் இவ் அலுவலகத்தில் இருந்து பெறப்படும் பத்திரங்களிலேயே சமர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்விக்காரரினால் சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா 15,000/-ஆகும். கேள்வி நிபந்தனைகளையும் ஏனைய விபரங்களையும் இவ் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

செயலாளர்,
நகரசபை, வவனியா

நகரசபை அலுவலகம்,
வவனியா, 29-8-86.

(A 1222)


## சட்ட விரோத மின் அகற்றப்பட்டது

சுண்டுக்குளி, செவ்வாய்

யாழ் அபிவிருத்தி சபையின் ஆனைகோட்டை உப அலுவலகத்திற் குட்பட்ட பகுதிகளில் சட்ட விரோத மின் பாவனை அகற்றப்பட்டது.

இப் பகுதிகளில் சமீபகாலமாக அதிகரித்து வந்துள்ள சட்ட விரோத மின்பாவனை அண்மையில் ஆனைக்கோட்டை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு எஸ். மகாதேவாவும் ஊழியர்களும் அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு சென்று திடீர் பரிசோதனை நடத்திய சமயம் சட்ட விரோதமான முறையில் பாவிக்கப்பட்டு வந்த மின் பாவனை கண்டு பிடிக்கப்பட்டது. (எ)

## கிறனேட் வீசசு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு பஸ் நிலையத்திலிருந்து வாவிக்கரை ஓரமாக நேற்று மாலை நகரை நோக்கி நடந்து சென்ற ஊர்காவல் படையினரை நோக்கி கிறனேட் வீசப்பட்டது.

ஒரு இளைஞனை அதிரடிப் படையினர் கைது செய்து கொண்டு சென்றதை அடுத்தே கிறனேட் வீசப்பட்டதாம்.

இதனைத் தொடர்ந்து ஊர்காவல் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அங்கு நடமாடிக்கொண்டிருந்த மக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினர்.

இச்சம்பவத்தின்போது அங்கு நின்ற நமது நிருபரும் ஊர்காவல் படையினராலும் பின்னர் வந்த அதிரடிப் படையினராலும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறார். (மா)


## முக்கிய அறிவித்தல்

இந்தியாவின் சதியா எமது மதியா [நாடகம்] திருநெல்வேலி முத்துத்தம்பி மத்திய மகாவித்தியாலயத்தில் 6-9-86 (மாலை 6-00) நடைபெறவிருந்தது. சில நடைமுறைச்சிக்கல்களால் 10-9-86 [மாலை 3-00] என மாற்றப்பட்டுள்ளது. தமிழீழத் தேசிய விடுதலைக்கான போராட்டத்தில் இந்தியாவின் பாத்திரம் என்ன என புரிந்துகொள்ள விரும்பும் சகலரையும் தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

நுழைவுக்கட்டணம்: 5/- ரூபா.

சமூக விஞ்ஞான ஆய்வு நிறுவனம்.

(C 4388)



## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் டாக்டர் சின்னப்பு சின்னையா**
(R. M. P.)

அன்னை மடியில்:
24-07-1913

இறைவன் அடியில்:
29-08-1981

திதி:
03-09-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்து மனிதகுலத்தின் மதிப்பிடமாயும் எம்குலத்தின் வழிகாட்டியாயும் திகழ்ந்த தெய்வமே, வெள்ளி மறைந்தது போல் மறைந்து எங்களை ஆருத்துயரில் விட்ட அன்புத் தந்தையே நீங்கள் இறைவனடியில் மறைந்திருந்தாலும் எங்கள் உள்ளத்தில் என்றென்றும் வாழ்ந்திருப்பீர்கள் ஐயா. உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லைக் கந்தனின் தீர்த்தோற்சவமான இன்று பிரார்த்திக்கும்,

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

களபூமி,
காரைநகர். C 4396



# இன்று முதல்
# RSR GREEN PEKING PALACE

யாழ். நகரில் 4-ம் குறுக்கு வீதியில்
மக்கள் நலன் கருதி

சேவை செய்ய
முன்வந்துள்ளது.



RSR

GREEN PEKING PALACE

அன்பான உபசரிப்புடன் குறைந்த விலையில்
குளிர்பானங்களுடன் கூடிய

COFFEE SHOP, SNACK BAR (TEA, COFFEE), CHINESE உணவு வகை,
SHORT EATS, ICE-CREAMS.

உங்கள் வீட்டுக்குத் தேவையான GROSERY, FANCY GOODS
இவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் உடலுக்கும் உள்ளத்திற்கும் தெம்பை அளிக்க
உங்கள் நலன் கருதி காலை 9-00 மணிமுதல் இரவு 10-00 மணிவரை
சேவைபுரிய காத்திருக்கின்றனர்.

யாழ்நகரிலேயே முதன்முறையாக உங்கள் இல்லங்களுக்கு உணவுவகைகளை எடுத்து வந்து நவீனமுறையில் உங்கள் திருப்திக்கு ஏற்றவாறு சேவைசெய்ய முன்வந்துள்ளனர்

Green Peking Palace ஸ்தாபனத்தார்

ALSO:

ORDERS UNDERTAKEN — CHICKEN BURIYANI Pkt. 25/-
LUNCH, SHORT EATS, COOL DRINKS, ICE CREAM, CAKES-

For
★ Wedding Reception
★ Birthday Parties
★ Cocktail Parties
etc. etc. etc.

For more Information:
MANAGER,
PEKING PALACE,
No. 69 G, 4th Cross St.,
JAFFNA.

(A 1304)


## அமரர் ஆனந்தம்

யாழ்ப்பாண ஏழை மக்களை பட்டினிச் சாவிலிருந்து ஏழு வருடகாலமாக காப்பாற்றிய யாழ். உணவு கட்டுப்பாட்டு அதிகாரி ஆனந்தம் எங்கள் மத்தியில் இன்று இல்லை. இவர் சென்னையில் யூலை மாதம் மாரடைப்பால் காலமானார்.

யூனியன் கல்லூரி பழைய மாணவரான ஆனந்தம் கல்வியிலும், விளையாட்டிலும், சாரணர் இயக்கத்திலும், பெரிய அண்ணன் அரவணைப்பில் ஒரு உண்மையான கிறிஸ்தவனாகவும் விளங்கினார். இவர் அரசாங்க சேவையில் அதி உயர்ந்த நிர்வாக சேவை முதல் தரத்தில் உயர்ச்சி அடைந்து ஒய்வு பெற்றார். உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியாக வறிய மக்களின் நிலைமை ஆராய்ந்து உணவு முத்திரைகளை வழங்கி பேருதவி செய்து வந்தார். ஓய்வு பெற்றதும் கோப்பாயில் சமூக சேவையில் லயன்ஸ்சழக தலைவராக இருந்து அரும்பணி ஆற்றினார்.

சென்னையில்இருந்து மருதனமடம் ஆதீன தலைவருக்கு இவர் எழுதிய கடைசிக் கடிதத்தில் தான் ஒரு கிறிஸ்தவ துறவியாக விரும்புவதாக எழுதி இருக்கிறார். அவர் யேசுவின் பிள்ளையாக பரமானந்தம் அடைந்துள்ளார்.

அவர் மனைவி மக்கள் ஒரு அருமைக்குடும்பத்தலைவனையும் கோப்பாய் மக்கள் ஒரு சமூகத் தொண்டனையும், கிறிஸ்தவ உலகம் ஓர் உண்மை ஊழியனையும், எம்மைப் போன்றவர்கள் ஒருதலை சிறந்த நண்பனையும் இழந்து தவிக்கின்றோம். அவர் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போமாக.

— இ. சபாரத்தினம்

### ஆயிரத்துக்குமதிகமான பயணிகள் சென்ற——

# சோவியத் கப்பல் விபத்து!

# பலர் பலி என அச்சம்

மாஸ்கோ, ஆக. 2

**கருங்கடலில் சோவியத் பயணிகள் கப்பலொன்று விபத்துக்குள்ளாகி மூழ்கியது. இவ்விபத்தில் ஆயிரத்துக்குமதிகமான பயணிகள் இறந்திருக்கலாமென அஞ்சப்படுகின்றது. கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு இந்த கப்பல் விபத்து இடம்பெற்றது.**

'அட்மிரல் நதிமோ' என்ற பெயரைத் தாங்கிய இக் கப்பல், கருங்கடலில் சரக்குக் கப்பல் ஒன்றுடன் மோதியதையடுத்தே விபத்துக்குள்ளானது. இம் மோதலின் போது 'அட்மிரல் நதிமோ' இரண்டாகப் பிளந்து நீரினுள் மூழ்கியது எனத் தெரிவிக்கப்பட்டது

சோவியத்யூனியனின் கருங்கடல் துறைமுகமான 'நொவராஸ்'ஸிலிருந்து இப் பயணிகள் கப்பல் புறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இக் கப்பல் பயணத்தை ஆரம்பித்த சமயம் அதன் மின்வெளிச்சங்கள் அனைத்தும் போடப்பட்டு குதூகலமானநிலையில் காணப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது

டாஸ் செய்தி நிறுவனம் அது இக் கப்பல் விபத்துப்பற்றித் தெரிவிக்கையில், இதில் ஆயிரத்துக்குமதிகமான பயணிகள் பயணத்தை மேற்கொண்டிருக்கலாமென்றும் இவர்களில் பலர் நீரில் மூழ்கியிருக்கலாமெனவும் கருத்து வெளியிட்டது.

இதேவேளை சோவியத்யூனியனின் கப்பற்துறை அமைச்சு கருத்து வெளியிடுகையில், கருங்கடல் நீர் தற்போது குளிரின்றி வெப்பமாக இருப்பதால் பலர் உயிர் தப்புவதற்கு வாய்ப்புண்டு எனவும் மீட்புவேலைகள் துரிதமாக இடம்பெறுகின்றன எனவும் தெரிவித்தது.

விபத்துக்குள்ளான கப்பலில் சென்ற பயணிகளின் எண்ணிக்கை தெளிவாக இதுவரை அறியப்படவில்லை. பயணிகளின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் பரிசீலிக்கப்பட்டுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பஞ்சாபில் நீதிபதி கொலை, தேசாய்க்கு பயமுறுத்தல்

புதுடில்லி, ஆக 2.

பஞ்சாப் மாநிலத்தில் நீதிபதி ஒருவர் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார். இவருடன் இம் மாநிலத்தில் வேறு இரு நபர்களும் நேற்று சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

சீக்கிய தீவிரவாதிகளே இக் கொலைகளுக்குப் பொறுப்பென்று தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளொன்றில் வந்த இருவரே அப் பஞ்சாப் நீதிபதியைக் கொலை செய்தனர். தொடர்ந்து பொலிஸார் சென்ற பஸ் வண்டியொன்றின் மீதும் தீவிரவாதக் கோஷ்டியொன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. இதில் அப் பஸ்வண்டியின் சாரதியும், நடத்துநரும் கொல்லப்பட்டனர்.

இதேவேளை முன்னாள் இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய்க்கு கொலைப்பயமுறுத்தல் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக் கடிதத்தையும் சீக்கிய தீவிரவாதிகளே அனுப்பியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

### உலகச் செய்திகள்

### கி. ஜெர்மன் இராணுவ அதிகாரி

## மே. ஜெர்மனிக்குள் அரசியல் தஞ்சம்!

பொன், ஆகஸ்ட் 2

கிழக்கு ஜெர்மனியின் உயர் இராணுவ அதிகாரி ஒருவர் மேற்கு ஜெர்மனிக்குள் அரசியல் தஞ்சம் புகுந்துள்ளார்.

லெப்டினன்ட் கேர்ணல் தரத்திலுள்ள 37 வயதான கிழக்கு ஜெர்மன் அதிகாரி ஒருவரே இவ்வாறுமேற்குஜெர்மன்வந்தவராவர்

இவர் கிழக்கு ஜெர்மனியின் எல்லைக்காவல் படையினது 3வது பிரிவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

தமது இராணுவச் சீருடையுடனேயே இவர் மேற்கு ஜெர்மனிக்குள் நுழைந்துள்ளார், ஆயினும் இவரிடம் ஆயுதங்கள் எதுவும் இருக்கக் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த அதிகாரி மீதான விசாரணைகள் மேற்கு ஜெர்மனியில் ஆரம்பமாகியுள்ளன.

பெர்லின் சுவர் நிறுவப்பட்ட 25-வது வருட பூர்த்தியையடுத்து இச் சுவரைக் கடந்து மேற்குஜெர்மனிக்குள் நுழைந்த 2வது சம்பவம் இதுவாகும்.

## வெளிநாடு பயணம்



யாழ்ப்பாணம், புதன் நீர்வேலியை சேர்ந்த இராசையா வசந்தகுமார் 5 வருட பொறியியலாளர் பயிற்சிநெறிக்காக, புலமைப்பரிசில் பெற்று செக்கோசிலவாக்கியா சென்றுள்ளார்.

இவர் இளைப்பாறிய தபால் அதிபர் சி. இராசையா தம்பதிகளின் புத்திரரும், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் பழைய மாணவருமாவர்.

[இ]

### 8-வது அணிசேரா மகாநாடு;

## ஹராரேக்கு கடாபி திடீர் விஜயம்!

ஹராரே, ஆகஸ்ட் 2

எட்டாவது அணிசேரா உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்கென லிபிய அதிபர் கேர்ணல் கடாபி எதிர்பாராதவிதமாக நேற்று ஹராரே வந்தடைந்தார்.

இவரது வருகை மகாநாட்டு ஏற்பாட்டாளர்களால் எதிர்பார்க்கப்படவில்லை. ஆயினும் கேர்ணல் கடாபி இறுதிநேரத்தில் ஹராரே வந்துசேர்ந்து அனைவரையும் ஆச்சரியத்திலாழ்த்தினார்.

லிபியாவும் ஓர் அணிசேரா இயக்க நாடென்பது குறிப்பிடத்தக்கது. பாதுகாப்புக் காரணங்களையிட்டே லிபிய அதிபர் கடாபி, தமது ஹராரே விஜயம் குறித்து இறுதிநேரம்வரை முடிவெதனையும் எடுக்காதிருந்திருக்கலாமென்று தெரிவிக்கப்பட்டது. லிபியா மீது கடந்த ஏப்ரல் மாதம் அமெரிக்கா குண்டு வீசியதையடுத்து லிபியஅதிபர் மேற்கொண்டுள்ள முதலாவது வெளிநாட்டு விஜயம் இதுவாகும் என்று தெரிவிக்கப்பட்டது

லிபிய அதிபரின் முன்னறிவிப்பில்லாத ஹராரே விஜயம் ஸிம்பாப்வே பாதுகாப்பதிகாரிகளை சங்கடத்துக்குள்ளாக்கியுள்ளது. சர்ச்சைக்குரியஉலகத்தலைவரானகடாபியைப் பாதுகாக்கும்வகையில் விஷேட ஏற்பாடுகள் செய்யவேண்டியிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

கேர்ணல் கடாபியும் தமக்கு அதிகளவு மெய்ப்பாதுகாவலர்கள் தரப்படவேண்டுமென கேட்டுள்ளார்.

## தமிழ் தின போட்டிகள்

உடுவில். செவ்வாய் மானிப்பாய் வட்டார கல்விப் பிரிவு பாடசாலைகளுக்கான தமிழ் தினப் போட்டிகள் பின்வரும் திகதி

(7ம் பக்கம் பார்க்க)


## பிரயாண ஒழுங்குகள்

கனடா ஜேர்மனி
பிரான்ஸ் கொலண்ட்
பெல்ஜியம் டென்மார்க்
சுவீடன் ஸ்பெயின்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

உடன் தொடர்புகொள்ளவும்.

INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரி அருகாமை)
மானிப்பாய். [A-1029]



## வெளிநாட்டு பிரயாண ஒழுங்குகள்

★ ஈராக்:- (ஆஸ்பத்திரி கிளீனேஸ்)
(ஈராக்குக்கு ஒரு மாதத்துக்குள் பயணம்செய்யலாம்)
★ லிபியா:- (ஒயில் கொம்பனி வேக்கேஸ்)
★ சவூதி அரேபியா:-(ஆஸ்பத்திரி, விமான நிலைய கிளீனேஸ்)
★ சவூதி அரேபியா:-(பூங்காவேலையாட்கள்)
★ லெபனன்:- (லேபறேஸ்)
★ குவைத்:- (கிளீனேஸ்)
★ குவைத்:- (வீட்டுப் பணிப் பெண்கள்)
★ சிங்கப்பூர்:- (வீட்டுப் பணிப்பெண்கள்)
★ குவைத்:- (பெண் ஆஸ்பத்திரி கிளீனேஸ்)

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக பாஸ்போட், 7 படம் மற்றும் ஆவணங்களுடன் நேரில் வந்து தொடர்புகொள்ளவும்.

டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்

பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு:- இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன் ஒழுங்கையால் வரவும். (A 1080)



## பிரயாண ஒழுங்குகள்

கனடா டென்மார்க்
ஜேர்மன் பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு கொழும்பில் இருந்து நேரடிப் பிரயாணம் மேற்கொள்ள அரிய வாய்ப்பு. செல்ல விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

எதிர்வரும் 15-ம் திகதி அழைத்துச் செல்ல இருப்பதால் 15-ம் திகதிக்கு முன் பதிவுசெய்து கொள்ளவும்.

குவைத், அபுதாபி, சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு வருமானம் பெற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் பாஸ்போட் பொண்ட், டிக்கட் என்பன செய்து கொடுக்கப்படும்

GROUP ATLANTIC

(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)
163, Hospital Road, Jaffna.
(A 1065)

உதைபந்தாட்ட——————

# மத்தியஸ்தர் விரிவுரைகள் ஞாயிறு முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன் 'யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், 'உதைபந்தாட்ட சட்ட விதிகள்' பற்றிய விரிவுரை வகுப்புகளை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நடாத்தவிருக்கிறது.

இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினல், மிகவிரைவில் புதிய மத்தியஸ்தர்களுக்கன பரீட்சை நடைபெறவிருப்பதினல், மேற்படி விரிவுரை வகுப்புகளை, யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடாத்துவதற்கு முன் வந்துள்ளது,

'இவ் வகுப்புகளில், உதைபந்தாட்ட வீரர்கள், பாடசாலை மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், உதைபந்தாட்டப் பிரியர்கள் யாவரும் வயதுக் கட்டுப்பாடின்றி கலந்து கொள்ளலாம்' என, யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் திரு. ஈ. கே. குமரையா தெரிவித்தார்.

உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கன விரிவுரை வகுப்புகள், எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியிலும், 14-ம் திகதி சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்திலும், 21-ம் திகதி கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும், 28-ம் திகதி சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும் காலை முதல் பிற்பகல் வரை நடைபெறும்.

இவ்விரிவுரை வகுப்புகளை பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை, உடற் கல்வி விரிவுரையாளர் திரு. கே. ஐத்துகுலசிங், வட்டாரக் கல்வி உடற் பயிற்சி அதிகாரி திரு. விஜணேசலிங்கம், யாழ். மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு. ஏ. எஸ். குணரட்ணம், முன்னள் யாழ். மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு எம். டி. தம்பிராசா, யாழ் பல்கலை கழக உடற் கல்வி விரிவுரையாளர் திரு. எம். பத்மநாதன், உதைபந்தாட்ட மத்தியஸ்தர் திரு. டி. ஏ. எம். குணசிங்கம் ஆகியோர் நடாத்துவதற்கு முன்வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்விரிவுரை வகுப்புகளுக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கக் காரியதரிசி திரு. ஏ தேவராசா செய்துள்ளார். [வி-இ]


# A/L 87

தூய பிரயோககணிதம்

பகல் நேர வகுப்பு

**ஆரம்பம்: 5-9-86**

10-30: காவிகள்

11-45: அட்சரகணிதம்

ஆசிரியர்: ரவிமோகன்

யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

C 4273


## தமிழ் தின

(6ம் பக்கத் தொடர்ச்சி)

களில் நடைபெற உள்ளன- 19ம் திகதி ஏழாலை உப வட்டாரம் ஏழாலை மகா வித்தியாலயத்தில், 22ம் திகதி மானிப்பாய் உப வட்டாரம் மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை 23ம் திகதி உடுவில் உப வட்டாரம் உடுவில் இராமநாதன் கல்லூரி. இறுதிப் போட்டிகள் உடுவில் இராமநாதன் கல்லூரியில் 27ம் திகதி நடைபெறும்.

மானிப்பாய் வட்டார பாடசாலை இசை, நடன, நாடக போட்டிகள் எதிர்வரும் 10ம் திகதி உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என வட்டார கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் அறிவித்துள்ளார்.


எமது பிரதேசத்தில் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ள திட்டமிட்ட சேமிப்பும், தகுந்த செயற்பாடுகளும் அவசியமாகும்.

★ ஆலோசனை

★ வசதியான திட்டங்கள்

★ வழிகாட்டல்

அனைத்தையும் ஒருங்கே வழங்கும் நிறுவனம்:

# அபிவிருத்தி நிதியம்

337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ அபிவிருத்திக்கு உதவி சேமிப்போம்!

★ அபிவிருத்திக்கு உதவி முதலீடு செய்வோம்!

[A-1093]



# கமல்ஸ் சேவிஸ்

நாங்கள் உங்களை டென்மார்க் நாட்டிற்கு காவிச் செல்கிறேம் இது பூச்சாண்டி அல்ல. கமல்ஸ் சேவிஸ் தரும் ஓர் அரிய வாய்ப்பு.

டென்மார்க் செல்வோர்க்கு சொகுசான பயண வாய்ப்புடன் எமது முகவர்கள் உங்களை கொழும்பில் இருந்து நேரடியாக அழைத்துச்செல்வர். இது நாம் தரும் உத்தரவாதம்.

கமல்ஸ் சேவிஸ் வழங்கும் இதர சேவைகளை மறந்துவிடாதீர்கள்.

இதோ மீண்டும் உங்கள் நினைவிற்கு உலகநாடுகள் அனைத்திற்கும் மிகக்குறைவான கட்டணத்தில் பிரயாண சீட்டுகள், விசா, வெளிநாட்டு பயணிகள் காசோலைகள், கடவைச் சீட்டுகள், பொண்ட் (BOND) இவை அனைத்திற்கும் நகரில் நம்பிக்கை நிறுவனம்: கமல்ஸ் சேவிஸ்

## கமல்ஸ் சேவிஸ்,

பஸ் நிலைய முன் - டில்க்கா கிறீம் கவுஸ் மேல்தளம், யாழ்ப்பாணம். தூரவசனி சுழல் இலக்கம்; 24174

விளம்பர வடிவமைப்பு:- ஜோ. எகட்டன் + மணிக்குரல் மேஜர் ஷண் = செனித் ADS

(A-1215)


## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



ஸ்ரீமான் வேலாயுதம் சிவயோகராஜா

(சிவா)

(தொழில் நுட்ப உதவியாளர் நீர்ப்பாசன இலாகா வவனியா)

அன்னையின் மடியில்: 06-03-1946

கொடியவர் பிடியில்: 03-09-1985

எம்குடும்பம்தனை ஒளிர வைத்த பெருந்தகையே உங்கள் நலனை ஒறுத்து, வெறுத்து எம்மைக் காத்த சுடர் ஒளியே எம்மை எல்லாம் ஆளாக்கிய அருட்சுடரே தம்மைத் தியாகம் செய்து எம்மை மேலோங்க வைத்த ஒளிவிளக்கே உங்கள் பொறுமைகளைச் சாதித்து எங்களைக் கவர வைத்த கற்பகமே, அநுராதபுரம் சென்று திருமபுகையில் பாதிவழியினிலே பாதகர் கையில் சிக்குண்டாய்! உமது உயிருக்கு ஊறுதான் நடந்ததோ, சதிகாரக் கும்பல் உம்மை எத்தனை சித்திரவதை செய்ததோ நாமறியோம் எம்மையெல்லாம் ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு மின்னலென மறைந்துவிட்ட அன்புத் தெய்வமே! உமது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்.

குடும்பத்தினர்.

'அருள்வாசா' உடுவில். C 4321

# இன்றைய பலன்

மாதம்- ஆவணி
திகதி- 18 (1986-9-3)
கிழமை- புதன்
திதி- சதுர்த்தசி பி.ப.வரை
நக்ஷத்திரம்- மகம்
பி. இ. வரை

மேடம்- நீண்டநாள் கனவு இன்று நனவாகும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பும் கிடைக்கலாம். குருவின் ஆசியும் உண்டு.

இடபம்- கடமையாற்றும் இடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும். அறிஞர்கள் போற்றுவர். ஆதரவும உண்டு.

மிதுனம்-அதிர்ஷ்டதேவதையின் அருள் உங்களுக்குக் கிடைக்கலாம். செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவு தப்பாமல் உண்டு.

கடகம்- குறைகேட்க நேரிடும். கடமையில் தடைகள் தோன்றும். எதிர்பாராத நஷ்டத்திற்கும் இடமுண்டு.

சிங்கம்- மனதில் விரக்தி நிலை தென்படும். உடல்நலமும் பாதிக்கப்படும். கால்நடைகளினல் நஷ்டத்திற்கு இடமுண்டு.

கன்னி- மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். நண்பர்கள்மூலம் தொடர்புகள் ஏற்படும். தொழிலிலும் நன் மாற்றமுண்டு

துலாம்- பொருள் வரவு உபசாரம். பொழுதுபோக்கு இவற்றுடன் உற்சாகமூட்டும் செய்தியும் கிடைக்கும்.

விருச்சிகம்- நீண்ட நாள் எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும் வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு. புதிய துறைகளில் முதலீடு செய்யவும் நேரும்.

தனுசு- மதவழி நடப்பின் மற்றவர்கள் பெருமைப்படுமளவிற்கு முன்னேற்றமுண்டு. அன்னை வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

மகரம்- புத்திர வழியால் புகழுண்டு, புதிய பாதையில் தடையேற்படும். குடும்பத்தில் பிணைப்புகள் இறுகும்.

கும்பம்- கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும். களஸ்திர வழியாலும் சிறப்புண்டு. திடீர் வரவுக்கும் இடமேற்படும்.

மீனம்- கௌரவத்தைப் பாதிக்கக் கூடிய சம்பவங்கள் இடம்பெறும். தூற்றல்களை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். எதிலும் முன் யோசனை நன்று.

திருமலை
வே. ரவீந்திரன்

## உதைபந்தாட்ட போட்டி

உடுவில், செவ்வாய் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக் கிடையிலான 13 வயதுக்குட்பட்ட மாணவர் களுக்கான உதைபந்தாட்ட போட்டிகள் 'நொக் அவுட்' அடிப்படையின் கீழ் இம் மாதம் 15ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதில் பங்கு பற்ற விரும்பும் பாடசாலைகள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 5ம் திகதிக்கு முன்பதாக உடற் கல்வி வட்டார கல்வி அதிகாரிக்கு அனுப்பிவைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [எ]


# பிரயாண ஒழுங்கு-குவைத்

| | | |
|---|---|---|
| 1. | V. T ராதா | H 0085410 |
| 2. | A குணசீலன் | H 0477799 |
| 3 | A ஞானசேகரம் | F 12:963 |
| 4. | S ரவிச்சந்திரன் | H 02 6914 |
| 5. | R அமிர்தலிங்கம் | H 0254287 |
| 6 | S மோகன்ராஜ் | H 0100925 |
| 7. | M மங்கஸ்வரன | H 0356331 |
| 8. | N. சிறீரங்கநாதன் | H 0418650 |
| 9. | A உதயகுமார் | H 0483341 |
| 10 | S தர்மராஜா | H 0480600 |
| 11. | N. ஜெயசீலன் | H 0321797 |
| 12. | K. ரட்ணசிங்கம் | H 0102892 |
| 13 | S. ராஜேஸ்வரன் | H 0395484 |
| 14 | V தியகநாயகலிங்கம் | H 02159 6 |
| 15. | K V சிவராஜா | H 0474044 |
| 16. | G T. தாமரைமணாளன் | H 0461 39 |
| 17 | A C அருள்தாஸ் | H 0281546 |
| 18. | S இந்திரராஜா | H 0320080 |
| 19 | J A வலன்டீன் | G 0341780 |
| 20. | J S சிவதாசன் | H 0281339 |
| 21 | S. செல்வராஜா | H 0474625 |
| 22 | V S சேனாதி | H 0244462 |
| 23. | A K கர்ணன் | H 0239180 |
| 24. | V T சுகுணசிங்கம் | H 0311377 |
| 25. | N M சூரியகுமார் | H 0313554 |
| 26. | P E சந்திரன் | H 0342781 |
| 27. | S குழந்தைவேல் | H 0310680 |
| 28. | T சீலன் | H 0347126 |
| 29. | K T விஜயரட்ணம் | H 0064813 |
| 30. | M மகாலிங்கம் | H 03 3834 |
| 31. | P S தேவராசன் | H 0106813 |
| 32. | S S ராஜலிங்கம் | H 0386676 |
| 33 | K N இந்திரன் | H 354027 |
| 34. | S நந்தசுதன் | H 0312174 |
| 35. | P. நடராஜா | H 005520 |
| 36. | K. A ஆனந்தராஜா | H 0240976 |
| 37. | R. சேகர் | H 0419775 |
| 38. | A M மேரு | H 0483326 |
| 39. | B. குணேந்திரலிங்கம் | J 0009842 |
| 40. | T T மகேஸ்வரன் | H 0310929 |
| 41. | S. சிறீஸ்கந்தவேல் | H 0074941 |
| 42. | E P. மாணிக்கம் | H 04.51:5 |

மேற்குறிப்பிட்ட நபர்கள் 10-9-86 குவைத்திற்குச் செல்ல வேண்டும். உடனடியாக எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## யூனிவேர்சல் ஏஜென்சி

125(455), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)

(A 1303)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
புதன்கிழமை 3-9-86

## மொழிவாரி மாநில அமைப்புக்கான
# எல்லை நிர்ணயக்குழுவொன்றை நியமிக்குமாறு இந்தியா வலியுறுத்தல்

கொழும்பு, செவ்

இனப்பிரச்னை தீர்வுக்கு அரசாங்கம் முன்வைத்த மாகாண சபையோசனைகள் அடிப்படையில், மொழிவாரி மாநில மொன்றை அமைப்பதற்கும்அம் மாநிலத்தின் எல்லையை நிர்ணயிப்பதற்கு ஒரு குழுவொன்றை நியமிக்குமாறு இந்திய அரசு, இலங்கையை வலியுறுத்தியுள்ளதாக இந்துப் பத்திரிகையின் அரசியல நிருபரொருவர்செய்திவெளியிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழர் விடுதலைக்கூட்டணியினருக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பெறு பேறுசளுக்கமையவே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசுக்கும்கூட்டணியினருக்குமிடையே நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தையின்போதுஇலங்கை அரசபடைகளையும், தமிழ்ப்போராளிகளையும் வன்செயல்கள், தாக்குதல்சளைத் தவிர்க்குமாறு இந்தியா வற்புறுத்தியிருந்த போதிலும், இருதரப்பினரது நடவடிக்கைகளாலும் அது இந்தியாவுக்கு ஒரு தோல்வியாக முடிந்துள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார். [கூ-கே]

## நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் சென்பெனடிக்ற் வித்தியாலயம் நாளை 4ந்திகதி ஆரம்பமாகும் என்று பாடசாலை அதிபர் அருட்சகோதரி எம். லீசா அறிவித்துள்ளார்.

## நல்லூர் கடைகளில் விற்பனையாகும் விளையாட்டு துப்பாக்கிகளுக்கு சிறுவர் மத்தியில் கிராக்கி

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் உற்சவத்தை யொட்டி அமைக்கப்பட்டுள்ள கடைகளில் விளையாட்டுத் துப்பாக்கிகளே அதிகம் விற்பனையாகின்றன பெற்றோர்களுடன் கோவிலுக்கு வரும் சிறுவர்கள் கடைகளில் பல்வேறு விதமான விளையாட்டுப் பொருட்கள் இருந்த போதிலும் விளையாட்டுத் துப்பாக்கிகளையே விரும்பி வாங்குகின்றனர்.

கைக் குழந்தைகள் தாயின் அரவணைப்பில் கையில் விளையாட்டுத் துப்பாக்கிகளை வைத்திருப்பதனைக் காணக் கூடியதாயிருக்கிறது. கடைகளில் விளையாட்டுக் கைத் துப்பாக்கிகள், யந்திரத் துப்பாக்கிகள் பல்வேறு அளவிலும், பலரகத்திலும் விற்பனைக்குத் தொங்கவிடப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில்பலூன், விசில், விளையாட்டுக்கார், பந்து ஊதுகுழல் ஆகியவற்றைச் சிறுவர்கள் வாங்குவார்கள், ஆனால் தற்போது இத்தகைய பொருட்கள் கடைகளில் இருந்த போதிலும் அவற்றை அலட்சியம் செய்து பெற்றோரிடம் அடம் பிடித்து விளையாட்டுத் துப்பாக்கிகளையே வாங்குகின்றனர். (ச)

## நினைவுச்சின்னம்

யாழ்ப்பாணம். புதன்

அமரர் திரு. வி. தர்மலிங்கத்தின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு உடுவில் உள்ளூராட்சி மன்றத்தில் நினைவுச்சின்னம் ஒன்றை யாழ் தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா நேற்று திரைநீக்கம் செய்துவைத்தார்.

அமரரின் நினைவுதினத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய அன்னபூரணி மண்டபத்தில் அன்னதான நிகழ்ச்சியும் இடம் பெற்றது. (வா)

## துப்பாக்கி முனையில் தங்கநகை, பணம் கொள்ளை

உடுவில், செவ்.

இரவு நேரத்தில் இனந்தெரியாத இரண்டு நபர்கள் துப்பாக்கியைக் காட்டி வீட்டுக்காரரைப் பயமுறுத்தி பல தங்கநகைகள், பணம், ரேடியோ முதலானவற்றைக் கொள்ளையடித்துச் சென்ற சம்பவமொன்று உடுவில் கிழக்கில் நடைபெற்றுள்ளது.

உடுவில் கிழக்கில் வசிக்கும் திரு. எஸ் சண்முகநாதன் என்பவரின் வீட்டிலேயே இக் கொள்ளை நடைபெற்றது.

இக்கொள்ளை நிகழ்ச்சிபற்றி திரு எஸ் சண்முகநாதன் தெரிவிக்கையில் பின்வருமாறு கூறினார்:-

''கடந்த சனிக்கிழமை எனது வீட்டில்மனைவி பிள்ளைகளுடன் இரவு தொலைக்காட்சிபார்த்துக் கொண்டிருந்தேன். அச்சமயம் இனந்தெரியாத இரண்டு இளைஞர்கள் வீட்டினுள் நுழைந்து துப்பாக்கி, கத்தி ஆகியவற்றைக் காட்டி தாம் ஒரு குறிப்பிட்ட இயக்கத்தவர்கள் எனக் கூறிப் பணம் தருமாறு கேட்டனர் அதன்பின் மனைவி அணிந்திருந்த மூன்று பவுண் பெறுமதியான சங்கிலியைப் பறித்தெடுத்துக்கொண்டு துப்பாக்கி முனையில் அறைக்குள்ளிருந்த அலுமாரிகள், சூட்கேஸ் ஆகியவற்றைத் திறந்து பணம், நகைகள், ட்ரான்சிஸ்டர் றேடியோ போன்ற பொருட்களைக் களவாடியதுடன் எம்மையும் தாக்கிவிட்டுச் சென்றனர். கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதி சுமார் ஒரு லட்சம்ரூபா இருக்கலாமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## அடுத்தகட்ட பேச்சில்
# "போராளிகளும் பங்குபற்ற அரசு ஆலோசனை" - 'அமிர்'

சென்னை-செப் 2

''இனப்பிரச்னைத் தீர்வுக்கான அடுத்தசுற்றுப் பேச்சுக்களில் தமிழ்ப் போராளிகளும் கலந்துகொள்ள வேண்டுமென ஜனதிபதி ஜெயவர்த்தனவும், அவரது அரசும் ஆலோசனை தெரிவித்துள்ளது''

இவ்வாறு தமிழகம் திரும்பிய கூட்டணி செயலதிபர் அமிர்தலிங்கம் சென்னையில் பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றி கூட்டணியின் கோரிக்கை பற்றி அமிரிடம் கேட்கப்பட்டபோது அதற்கு அவர் நாங்கள் இணைப்பை ஜனதிபதியிடம் வலியுறுத்தினோம்; அதற்கு ஜனதிபதி எமக்குத் தந்த மாற்று ஆலோசனையை எழுத்து வடிவில் தருமாறு கேட்டுள்ளோம். அப்போது தான் அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமுன்னர் அவற்றைநாங்கள் ஆராயலாம் என்று கூறினர். [கூ-ஊ]

## 'மினி சினிமா ஒன்றியம்' அறிக்கை

யாழ்ப்பாணம், புதன்

''மினி சினிமாக்கள் நடத்துவதற்கான அனுமதிப்பத்திரங்களை 250 ரூபா முற்பணம் கட்டி மினி சினிமா ஒன்றிய' தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவேண்டும்.',

இவ்வாறு மினி சினிமா ஒன்றியத் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிககப்பட்டிருப்பதாவது; ''இப்பத்திரங்களைப் பெறுமல் வீடுகளிலோ திறந்த வெளிகளிலோ கட்டணங்கள் அறவிட்டு வீடியோ படம் காட்டக்கூடாது அத்துடன்ஆபாச சுவரொட்டிகளும் வெளியிடக்கூடாது ''

இவ்வொழுங்கு விதிகளை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ஊ-இ)

## கல்முனை பற்றி அரசு அறிக்கை

கொழும்பு, செவ்வாய்

கல்முனை பீச் வீதியிலும், வாடிவீடு றேட்டிலும் 7 முஸ்லிம்களினது வீடுகளும் 10தமிழரினது வீடுகளும் எரிக்கப்பட்டுள்ளதாக அரசு அறிக்கை ஒன்று கூறுகின்றது.

இதேவேளை கடந்த ஞாயிற்றுககிழமை கல்முனை அம்மன் கோயிலடியிலுள்ள வீடுகளுக்குத் தீவைக்கமுயன்ற 300 பேர் கொண்ட கோஷ்டியொன்றை நோக்கிப் பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த 3 பேர் காயமடைந்ததாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. (ஊ)

## வேம்படி மகளிர் — யாழ். மத்திய கல்லூரிகள்
# 8-ம் திகதி ஆரம்பிக்க மாற்று நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையும், யாழ். மத்திய கல்லூரியும் வருகின்ற 8-ம் திகதி ஆரம்பமாகி நடைபெறும்.

வகுப்புகளை நடத்துவதற்கு சில மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாமெனவும் தெரிகிறது

யாழ் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் நேற்று இரு கல்லூரிகளின் அதிபர்களையும் சந்தித்துப் பேசினர்

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு முன்அனுமதி பெற்ற பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் யாவும் நேற்று இரண்டாந் தவணைக்காக ஆரம்பமாகி நடைபெற்றன யாழ் நகரத்திலுள்ள பெரிய கல்லூரிகள் யாவற்றிலும் நேறறுவழமைபோலமாணவர்கள் வருகை தந்திருந்தனர் [ச]

## அச்சுவேலியில் தொழுநோய்

[வசாவிளான் நிருபர்]

அச்சுவேலிப் பகுதியில் 17 தொழு நோயாளர்கள் இருப்பது மருத்துவஅதிகாரிகளினல் ஊர்ஜிதப் படுத்தப்பட்டுள்ளது.

இந்நோய் மேலும்பரவாமல் தடுக்குமுகமாக தொழுநோய் பற்றிய ஆய்வுக் கருத்தரங்கொன்றைபத்தைமேனி இளங்கதிர் சனசமூக நிலையத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

தொழுநோய்ப் பொறுப்பதிகாரி திரு. எம். குணரத்தினம் உட்பட பலர் இக்கருத்தரங்கில் உரையாற்யவுள்ளனர் (ஊ)

## கட்டுப்பாட்டுவிலையில்: எரிபொருள் விற்பனை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணப் பகுதிகளில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் கட்டுப்பாட்டு விலைக்கு டீசல் விற்பனை செய்யப்படுகிறது பெற்றோலும் மண்ணெண்ணையும் விரைவில் இந்நிலையங்களில் கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்யப்படும் நேற்று முன்தினம் விற்பனை செய்யப்பட்ட பெற்றோல், மண்ணெண்ணை முடிந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க)


## மரண அறிவித்தல்

### திருமதி நாகேசுவரி ஆறுமுகம்

சரவணை மேற்கு காலஞ்சென்ற ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், கிருபாதேவி நல்லையா [நல்லூர் வர்த்தகர்] கனகரத்தினம் [வரிமதிப்பாளர் கொழும்பு] குணரத்தினம், தட்சணாமூர்த்தி [வவனியா வர்த்தகர்] சகுந்தலாதேவி, அசோகமலாதேவி [ஆசிரியை புனித யோசப் கல்லூரி திருகோணமலை] மகேந்திரராசா [U. K] ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செல்வரத்தினம் [ஆசிரியர்] இரத்தினமலர், இராசமலர், தவமலர், ஜெயராமச்சந்திரன் [மொழிபெயர்ப்பாளர்] மனோன்மணி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார் இவர் பண்டிதர் க இராசையா [M M V வேலணை] காலஞ்சென்ற பாலசிங்கம், திருநாவுக்கரசு, ஐயாத்துரை [B. Sc] ஆகியோரின் அன்புத் தமக்கையுமாவார். ஈமக்கிரியைகள் 3-9-86 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சரவணையில் நடைபெறும்.

சரவணை மேற்கு,
சரவணை.

[C 4390]


## வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை யாழ். விஜயம் செய்யலாமென இலங்கைதூதரகம் அறிவிப்பு

கொழும்பு, செவ்வாய்

உலக நாடுகளிலுள்ள எந்தப் பத்திரிகையாளர்களும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யலாம் எனப் புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதரகம் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

இத்தூதரகம் தனதுசெய்தியில் எந்த நாடுகளிலுமுள்ள பத்திரிகையாளர்களும் யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள இராணுவ முகாம்களில் தாம் விரும்பியகாலம் வரை தங்கி நிற்கலாமெனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை கொழும்பிலுள்ள வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் வன்செயல் நடைபெறும் பகுதிகளுக்குத் தாம் சென்று சுதந்திரமாக எதுவித கட்டுப்பாடுமின்றி உலாவுவதற்கு அனுமதியளித்தால் இந்த அறிவிததலை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர். (கே)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.